**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**

**STC No.562/2021**

**2025**–ம் ஆண்டு ஜீலை மாதம் 11–ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–1(PW–1)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **விஜயகுமார்** | தொழில் | : | **விவசாயம்** |
| த/பெ. | : | தங்கவேல் | ஊர் | : | **கீழத்திருப்பந்துருத்தி** |
| வயது | : | 58 | மாவட்டம் | : | தஞ்சாவூர் |

**15.07.2025**

**எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது, வழக்கறிஞர் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 7–வது வரை படித்துள்ளேன். நான் விவசாய வேலை பார்க்கிறேன். நான் 10 வருடமாக செங்கல் கால்வாய் தொழில் செய்கிறேன். 19.10.2019–ஆம் தேதி எதிரி தரப்பில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். அந்த அறிவிப்பில் 15 தினங்களுக்குள் பதில் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான். பதில் அறிவிப்பை 15 தினங்களுக்குள் கொடுத்தேனா என்றால், வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன். வழக்கறிஞருக்குத் தான் தெரியும். 16.11.2019–ல் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பியதாக எனது சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

2. அந்த பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ரசீது மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை ஆகியவற்றை இந்த வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பதில் அறிவிப்பில் 25.11.2019–ல் பசுபதி கோவில் தபால் நிலையத்தில், இருந்து அனுப்பப்பட்டதாக ரசீது ஒட்டப்பட்டுள்ளது என்றால், எனது வழக்கறிஞருக்குத் தான் தெரியும். 25.11.2019–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்ற விவரத்தை எனது வழககறிஞர் என்னிடம் சொல்லவில்லை என்றால் சொன்னார்கள் சரியாக நினைவில்லை. 25.11.2019 தேதிய அறிவிப்பினை இவ்வழககின் ஆவணமாக தாக்கல் செய்தேனா என்றால் வழக்கறிஞருக்குத் தான் தெரியும். கடனில் எத்தனை வகை உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. கடனுக்கும், கைமாற்றுக் கடனுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். 2019 மே மாதத்தில் எதிரிக்கு நான் கைமாற்றுக் கடன் தான் கொடுத்தேன் என்றால் கைமாற்றுக் கடனாக கொடுக்கவில்லை.

3. 28.05.2019–ல் நான் எதிரியிடம் ரூ.2 லட்சம் கைமாற்றுக் கடனாகத்தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 23.05.2019–ல் ரூ.4 லட்சமும், 28.05.2019–ல் ரூ.2 லட்சமும் கொடுத்துள்ளேன். நகையை அடகு வைத்து தொகை கொடுத்ததாக நான் சொல்லியுள்ளதற்கு, நகை அடகு வைத்த ரசீது எவுதும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் நகை அடகு வைத்து கொடுக்கவில்லை என்பதால் தான் அந்த ஆவணம் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில், எதிரி வட்டியாக ரூ.5,000/–த்தை எனது வங்கி கணக்கிற்கு அனுப்பினார் என்பது தொடர்பாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4.என்னிடம் காட்டப்படும் எனது பதில் அறிவிப்பில், ரூ.6,67,000/–க்கு கடந்த 30.09.2019–ஆம் எதிரி எனது வீட்டிற்கு வந்து மேலக்கல்காண்டார்கோட்டை பாரத ஸ்டேட் வங்கி காசோலை கொடுத்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காசோலையைத்தான் இந்த வழககில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த காசோலையைத் தவிர வேறு எந்த காசோலையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் எதிரி எனக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. எதிரி தரப்பில் பழைய காசோலை எண்கள் 385656 முதல் 385705 எண் அடங்கிய காசோலை புத்தகமும், புதிய காசோலை எண்கள் 813171 முதல் 813203 வரையிலான எண் கொண்ட காசோலை புத்தகமும் காணவில்லை என்று 30.07.2019–ஆம் தேதி, எதிரி தரப்பில் அவர்து வங்கியை அணுகி மேற்குறிப்பிட்ட காசோலைகளை யரேனும் வசூலுக்கு செலுத்தினால் நிறுத்தி வைக்க வேண்டி மனு கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கவில்லை.

5. எதிரி தரப்பில் மேற்படி மனுவில் குறிப்பிட்ட புதிய காசோலையில் ஒன்று தான் இந்த வழக்கு காசோலை என்றால் சரியல்ல. எதிரியின் நாத்தனார் எனது தம்பியை திருமணம் செய்த வகையில் எனக்கு உறவினர் என்றும், அதனடிப்படையில் எதிரி என்னிடம் கைமாற்றாக ரூ.2 லட்சத்தை 28.05.2019–ல் பெற்றார் என்றும், அந்த தொகையை கேட்டு நெருக்கடி கொடுத்ததினால் 15.07.2019–ல் எதிரி என்னிடம் ரூ.40,000/– கொடுத்துவிட்டு மீதம் உள்ள ரூ.1,60,000/–ஐ திரும்ப செலுத்துவதற்கு 28.05.2020 வரை கால அவகாசம் கோரியிருந்தார் என்றால் சரியல்ல. அது குறித்துத்தான் 19.10.2019 அன்று எதிரி எனக்கு அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். 2019 செப்டம்பர் மாதத்தில் எதிரியிடம் சற்று கடிந்து கொண்டதால் எதிரிக்கும் எனக்கும் அதன் பிறகு நெருக்கமான உறவு, பேச்சுவார்த்தை எதுவும் இல்லை என வழககில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. எதிரி எனக்கு நான் சொல்லக்கூடிய தேதியில், எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றும், நான் சொல்லும் தொகை எதுவும் என்னிடம் பெறவில்லை என்றும், புகாரில் சொல்லியுள்ள தொகை கேட்கும் உரிமை இல்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஓம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.